உ



அமரர் திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

அவர்களின் பிரிவு குறித்த

# நினைவுச் சரம்

03-12-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலுந்தெளி தேனும்பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்-கோலம்செய்
தூங்கங் கரிமுகத்து தூமணியே
நீயெனக்குசங்த் தமிழ்மூன்றும் தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

யா/ தென்மராட்சி
தனங்களப்பை பிறப்பிடமாகவும்
மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும்
கொண்டவரும் **03.11.2004** அன்று
இறைவனடி சேர்ந்த
திருமதி **சிதம்பரப்பிள்ளை இராசம்மா**
அவர்களின் ஆத்மா இறைவனடி
சேர்ந்து நித்தியப்பேரானந்தம்
பெறுகவென அருள்மிகு மீசாலை
வடக்கு ஞானவைரவரின் பாதார
விந்தங்களைப் பணிந்து அவர்தம்
பாதங்களுக்கு இம்மலரை
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்,

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
**03.12.2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்புத் தெய்வம்

தோற்றம்
05
↓
03
↓
1917



மறைவு
03
↓
11
↓
2004

அமரர்

## திருமதி.சிதம்பரப்பிள்ளை இராசம்மா

திதி வெண்பா

ஆண்டு தாரண அழகுறு ஐப்பசித் திங்கள்
பூண்ட நற்ஷஷ்டி திதியதனில் போயணைந்தாள் - பெருமைசேர்
இராசம்மா வென்னு மினியநற் பெண்ணாள்
இறைவன் பொற் பாதம் தன்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுறைத் திரட்டு

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற்காட் செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்று மென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத நைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித்திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதை புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காம பெருமாளே.

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக



திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிக்கெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விரிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது ஆக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளிப்பும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயங்குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல் விப்புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரனை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றெனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு றவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந் துறவாக
உன்னை துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்று அன்பாய் பிரிய மளித்து
மைந்தன் என்மீது உன்மனமகிழ்ந் தருளி
தஞ்சமென்ற அடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் ஷட்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத் துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகி
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருள்வர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர் கைவேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சமிக்கு விருந்து உணவாகச்
சூர பத்மாவைத் துணித்த கையதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட்கொள என்றென துள்ளது
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாதி பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்ய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

-முற்றிற்று-



திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதிசிதம்பரப்பிள்ளைஇராசம்மா

திருமதிசிதம்பரப்பிள்ளைஇராசம்மா

# திருமதி. சிதம்பரப்பிள்ளை இராசம்மா அவர்களின் வாழ்க்கை வரலாறு.

செந்நெல் விளைந்து செல்வம் கொழித்திடும்
தரணியில் சிறந்த தனங்களப்பூரில்
பெருந்தவம் செய்த பெற்றோர் கையில்
பெண்ணாய் பிறந்தாள் பத்தினியாள் இராசம்மா.

பெற்றோர் மகிழப் பேரறிவு தான் பெற்று
பெருமையுடன் விளங்கினாள் பெண்ணாள் இவளும்
பெற்றோர்கள் இவளின் பேரழகை தாம் கண்டு
பொற்றாலிதனைக் கட்டப்பேசி முடிவெடுத்தார்.

மீசாலை ஊரிலே மிக்கழகு கொண்ட
சிதம்பரப் பிள்ளையென்னும் சீராளன் இவளின்
கரமதுபற்றி களிப்புடன் பொற்றாலி
கழுத்தில் கட்டி கணவனும் ஆனான்.

இல்லறம் தன்னில் இணைந்த இவர்கள்
நல்லறம் தன்னை நடத்தினர் உலகில்
பிள்ளைகள் எழுவரைப் பெற்றே மண்ணில்
பேரானந்தம் கொண்டே பெருமையுற்றாள்.

பிள்ளைகள் அனைவரையும் பேணிவளர்த்து
அறிவைப் பெற்றிட அரும்பணியாற்றி
இல்லறம் தன்னில் இணைத்து வைத்து
இன்புற்றிருந்தனர் இவளும் மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

கணவனை இழந்து கலக்கமுற்றாள்
காலம் சென்றிட கலக்கமோ வளர்ந்தது.

மூத்தமைந்தன் முடித்தான் வாழ்வை
துடியாய் துடித்து துவண்டாள் இராசம்மா
இன்னல் தீராதிருந்தவேளை
மருமகன் இருவர் மண்ணை விட்டு மறைந்தனர்.

மீளாத்துயரில் மிக்குற்ற இராசம்மா
நோய்வாய்ப்பட்டு நொந்து மிகவாடி
இருந்தவேளை இவள் மூத்தமருமகள்
இவ்வுலக வாழ்வை இனிதே நீத்தாள்.

அடிக்கடி துன்பத்தில் அல்லலுற்ற இராசம்மாவே
அகமிக நொந்து அல்லல்பட்டாள்
நோயுற்று இவளோ நொடியினில் வீழ்ந்தாள்
காலன் இவளுயிர் கவர்ந்து சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

## மகன் திரு.சி.கனகலிங்கம் அவர்களின் இதயக்குமுறல்.

இளையமகன் என்றென்னில் இணையில்லா அன்புகொண்டு
இணைபிரியாதென்னோடு இறுதிவரை இருந்து
பல்லுதவி எந்தனுக்கு பகலிரவாய் செய்து
பாசமுடன் வாழ்ந்தஎன் பண்புடைய அம்மாவே!

நேசமுடன் நானும் நெடுநாள் உன்னுடன்
பாரினில் உன்னைப் பாதுகாத்து வாழ்ந்து வந்தான்
சற்று நேரம் எனைக்காணாது சலனம் கொண்டு
எப்போ வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பாய்

இன்பமுடன் யான்வாழ இனியநற்பணிசெய்த
அன்புடைய அம்மாவே! ஆருயிர்த் தெய்வமே!
எனைப்பிரிந்து சென்றதினால் என்னுள்ளம் வாடுதம்மா!
எங்கே காண்பதென்று ஏங்குகிறேன் இவ்வுலகில்.

## மகள்மார் திருமதி.பொ.சரஸ்வதி, திருமதி.செ.அன்னம்மா, திருமதி.க.செல்லம்மா, திருமதி.பொ.இராசபூபதி, திருமதி.தே.புவனேஸ்வரி ஆகியோர் இதயக்குமுறல்.

அன்புடன் பெற்றெடுத்து அரவணைத்துக் காத்து
அறிவுதனை எமக்கூட்டி அகிலமதில் வளர்த்து
இல்லறமாம் நல்லறத்தில் இனிதாய் இணைத்து வைத்து
இன்பமுடன் வாழவைத்த இனியநல் அம்மாவே!

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

ஓடி நீ வந்தெமக்கு உற்ற பல்லுதவி செய்வாய்
நாடி நீ வந்தெமக்கு நல்லறிவு கூறிடுவாய்
பாசமுடன் நாமும் பாரினில் வாழ்ந்துவந்தோம்
கலக்கமோ சிறிதுமின்றி களிப்புடன் வாழ்ந்துவந்தோம்.

நோயுற்று நீயும் நொந்து மிகவாடி
பாயினில் படுத்திருந்தாய் பார்த்துயாம் துயருற்றோம்.
தெளிவு நீ பெற்றிட யாம் தெய்வத்தை வேண்டி நின்றோம்.
பலனேதும் இல்லாப்பாவிகள் ஆனோம் யாம்.

**மருமகன்மார் திரு. S.கந்தசாமி,**
**திரு. S. பொன்னம்பலம், திரு.ந.தேவகுமார்**
**ஆகியோர் இதயக்குமுறல்.**

பெற்றபிள்ளை போல் எம்மில் பேரன்பு மிகக்கொண்டு
பேருதவி பலசெய்த பெருமையுள்ள மாமியரே!
காலன் உங்களுயிர் கவர்ந்து சென்றதினால்
கண்ணீர்பெருகி யாம் கலக்கமுற்று வாடுகின்றோம்.

**மருமகள். திருமதி. க. சிவபாக்கியம்**
**அவர்கள் இதயக்குமுறல்.**

மருமகளாய் யானுங்கள் மனையில் புகுந்தவேளை
மனமகிழ்வு கொண்டெனை மனமார வாழ்த்தி
மருமகளாய ஏற்று மனையிலிருத்தி
பிரியமுடன் என்னோடு பிரியாமல் வாழ்ந்நதீர்கள்

பெற்றபிள்ளை போலெனக்கு பேருதவி பலசெய்து
தாயில்லா எனக்கு தாய்போல் இருந்தீர்கள்
பாசமுடன் உங்களுக்கு பணிவிடைகள் யான்செய்தேன்
பரிதவிக்கவிட்டென்னை பறந்தோடிச் சென்றதெங்கே?

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் இதயக்குமுறல்

அம்மம்மா அப்பம்மா என்று அன்புடன் யாமழைத்தால்
அருகினில் வந்திருந்து ஆசை மொழி கூறுவீர்கள்
பிரிவேதும் பிரியமுடன் இருந்தீர்கள்
பிரிந்து நீங்கள் சென்றதினால் பித்தர்களானோம் யாம்

**வெளிநாட்டில் உள்ள பேரப்பிள்ளைகள்**

**பிரேமதாசன் (இலண்டன்), பேரின்பநாதன் (சவுதி அரேபியா), நடேஸ் (இலண்டன்) செல்வராணி (பிரான்ஸ்) ஜெயக்குமார் (பிரான்ஸ்), செல்வரோகினி (சுவிஸ்), சிவானந்தம் (சுவிஸ்), இராஜசூரியன் (இலண்டன்), மகாலட்சுமி (இலண்டன்), குலசூரியன் (ஜேர்மனி) ஜானகி (ஜேர்மனி), உதயசூரியன் (நோர்வே), ஜெயவதனா (நோர்வே), செல்வஜோதி (ஜேர்மனி), தயாபரன் (ஜேர்மனி) செல்வறஜனி (இலண்டன்), சங்கநிதி (இலண்டன்), தவவர்ணன் (பிரான்ஸ்), ஆகியோர் இதயக்குமுறல்**

காற்றினில் வந்தசெய்தி காதினில் வீழ்ந்தபோது
கலக்கமுற்று கதறியழுதோம் அள்ளியணைத்தெடுத்து
அன்புமொழி பேசியஅந்நாளை நினைக்கிறோம் அம்மம்மா
இன்று யாம்.
நினைவோ எம்மை நிலைகுலையச் செய்கிறது
நிலைதடுமாறி நொட்டுயிர்த்து நிற்கின்றோம்
பால்போன்ற உங்கள் முகம் பார்க்காத பாவிகளாய்
பரிதவித்து வாடுகின்றோம் பாசமுள்ள அம்மம்மாவே.

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

## பூட்டப்பிள்ளைகள் இதயக்குமுறல்

அருகிருந்து உங்கள் அன்புமொழி கேட்பதற்கு
அதிகநாள் எம்மை அரனோ விடவில்லை
காலனோ உங்கள்உயிர் கவர்ந்து சென்றுவிட்டார்.
காணாது யாம் இங்கே கலங்கிவாடுகின்றோம்

## உற்றார் உறவினர் இதயக்குமுறல்

இன்முகம் கொண்ட எங்கள் இனியநல் இராசம்மாவே
உற்றநல் உதவிபல உவந்தெமக்கு நீ செய்தால்
பற்றுமிகக் கொண்டு பாசமுடன் நாமிருந்தோம்
நீ பிரிந்து சென்றதனால் நிலையற்று தவிக்கின்றோம்

## தேற்றம்

மண்ணில் பிறந்தவர்கள் மடிவது நியதி
மறுத்திடமுடியாத மாபெரும் உண்மை
துயரங்கள் நீங்கி துணிவுடன் வாழ்ந்து
தர்மங்கள் பல தரணியில் செய்திடுவோம்.

திருமதி சிதம்பரப்பிள்ளை இராசம்மா

ஆக்கம்:
சி.பவளேந்திரன் (ஆசிரியர்)
மீசாலைவடக்கு, கொடிகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதம்பரப்பிள்ளை

- **சரஸ்வதி + பொன்னையா (அமரர்)**
  - மோகனதாசன் + கலைச்செல்வி
    - நிதர்சனா
    - சுயேஸ்
    - கெஜினா
    - கபிறாஜ்
    - கவிஜா
    - திவிஜா
  - பிரேமதாசன் + (இலண்டன்) யமுனா
    - துஜிதா
    - ஜபிதா
  - பிறேமகலா + பேரின்பநாதன் (சவுதிஅரேபியா)
  - சிவதாசன்
  - செல்வதாசன் + சுகந்தி
    - இலக்கியா
  - சந்திரகலா + நடேஸ் (இலண்டன்)
  - தர்மகலா + சிவதாசன்
    - மிலேனியா
    - பூமிகா
  - குகதாசன்
- **மகேஸ்வரன் (அமரர்) + கனகம்மா (அமரர்)**
  - சுபாஜினி + சசிகரன்
    - பிரணவி
  - சுபாஸ்கரன் + மஞ்சு (இலண்டன்)
  - சுகந்தினி
  - சுலோஜினி
- **அன்னம்மா + செல்வநாயகம் (அமரர்)**
  - செல்வராணி (பிரான்ஸ்) + ஜெயக்குமார்
    - அதிரதன்
    - அபர்ணா
  - செல்வறோகினி (சுவீஸ்) + சிவானந்தம்
    - வித்தாரா
    - மதுமிதா
  - இராஜசூரியன் (இலண்டன்) + மகாலட்சுமி
  - குலசூரியன் (ஜேர்மனி) + ஜானகி
    - அஜய்
  - உதயசூரியன் (நோர்வே) + ஜெயவதனா
  - செல்வசோதி (ஜேர்மனி) + தயாபரன்
    - நிவேதன்
    - நிதுசன்
    - அபிநயா
  - பிரபாகரன்
  - செல்வறஜனி (இலண்டன்) + சங்கநிதி
  - இராகவன் (கொழும்பு)
- **செல்லம்மா + கந்தசாமி**
  - சிவநந்தினி
  - சிவசிறி
  - தயாளன்
  - தயாமதி
  - சதீஸ்
  - சுரேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை இராசம்மா

மா
+
ி

நந்தினி
சிறி
ாளன்
ாமதி
ிஸ்
ரன்

கனகலிங்கம்
+
சிவபாக்கியம்

- மாலினி
- பிரதீபன்
- குகதிபன்
- ஜெகதீபன்
- மைதிலி
- பரதீபன்
- சிந்துஜா

இராசபூபதி
+
பொன்னம்பலம்

- செல்வேந்திரன்
- தவவர்ணன் (பிரான்ஸ்)
- அகிலன் (கல்வியியற்கல்லூரி, வவுனியா)
- கரிகரன் (இத்தாலி)
- தர்மினி
  +
  சிவகுமார் (ஆசிரியர் கிளிநொச்சி)
- தனேசன்
- வருண்ராஜ்
- தனுசிகா

புவனேஸ்வரி
+
தேவகுமார்

கீர்த்தனா
லக்சனா

தனோசிகன்
தேனுஜா
அட்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



எமது அன்புத் தெய்வம்

## திருமதி.**சிதம்பரப்பிள்ளை இராசம்மா**

அவர்கள் நோயுற்ற வேளையில் உதவி செய்த உற்றார், உறவினருக்கும் அன்னார் பிரிந்த செய்தி கேட்டு ஓடிவந்து துன்பத்தில் பங்கு கொண்டோருக்கும் இறுதிக்கிரியை வரை உதவி செய்த உற்றார், உறவினர் நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் அந்தியேட்டி சபீண்டிகரண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோருக்கும், கிரியைகள் திறம்பட நடாத்திய அந்தணப் பெரியோருக்கும் நூலை ஆக்கிய ஆசிரியருக்கும் அழகுற அச்சிட்டு வெளியிட்ட **சிவகஜன்** பதிப்பகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மீசாலை வடக்கு,
கொடிகாமம்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவகஜன் பதிப்பகம், கொடிகாமம். 0777 - 273607

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org